படிவம் - 1

# தேர்தல் அறிவிப்பு

(தேர்தல் நடத்துவது குறித்த 1961-ஆம் ஆண்டு விதிகளின் 3-வது விதியைப் பார்க்கவும்)

இதனால் அறிவிக்கப்படுவது என்னவென்றால் :-

1. புதுச்சேரி 10-காமராஜ் நகர் சட்டமன்ற தொகுதியிலிருந்து புதுச்சேரி சட்டமன்றத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடக்கவிருக்கிறது;

2. வேட்பாளர் அல்லது அவரது பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர், புதுச்சேரி தேர்தல் நடத்தும் அதிகாரி- IV அல்லது தேர்தல் நடத்தும் உதவி அதிகாரி (10-காமராஜ் நகர்), புதுவை-605001, உப்பளம், டாக்டர் அம்பேத்கர் சாலை, சுற்றுலா இயக்குனரகம், தரை தளத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் (அரசாங்க விடுமுறையில்லாத) ஏதேனும் ஒரு தினத்தில் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரையில் 30-09-2019 ஆம் தேதிக்குப் பிற்படாமல் நியமனச் சீட்டுகளைக் கொடுத்து விடலாம்;

3. மேற்சொன்ன இடத்திலும் நேரத்திலும் நியமனச் சீட்டுப் படிவங்கள் கிடைக்கும்;

4. நியமனச் சீட்டுகள் புதுவை-605001, உப்பளம், டாக்டர் அம்பேத்கர் சாலை, சுற்றுலா இயக்குனரகம், இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள கலந்தாய்வுக் கூடத்தில் 01-10-2019 ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்;

5. விலகல் அறிவிப்பை வேட்பாளர் அல்லது அவரது பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர் அல்லது அதனைக் கொடுக்க வேட்பாளரால் எழுத்து மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட அவரது தேர்தல் ஏஜெண்ட் மேலே 2-வது பாராவில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் எவரிடத்திலேனும் அவரது அலுவலகத்தில் 03-10-2019 ஆம் தேதியன்று மாலை 3-00 மணிக்குள் கொடுத்துவிடலாம்;

6. தேர்தலில் போட்டியிருந்தால் 21-10-2019 ஆம் தேதியன்று காலை 7-00 மணி முதல் மாலை 6-00 மணி வரையில் வாக்கெடுப்பு நடத்தப்படும்;

(L. முகமது மன்சூர்)
தேர்தல் நடத்தும் அதிகாரி-IV
10 - காமராஜ் நகர் சட்டமன்ற தொகுதி

இடம்: புதுச்சேரி
தேதி: 23-09-2019.

OFFICE OF THE RETURNING OFFICER-IV
PUDUCHERRY.